தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

(கிழமை இதழ்)

தொகுதி-3 | தி. பி. 2016 ஆடவை 23 (7-7-1985) 65 காசுகள் இதழ் எண் : 60 | பகுதி 23-24

இலங்கைத் தமிழர்களுக்கு உற்ற நிலை, எதிர்காலத்தில் இந்தியத் தமிழர்களுக்கும் கட்டாயம் வரும்!

இன்றுள்ள தமிழினத்தை ஒன்றுபடாமல் செய்பவர்கள் அரசியல் தலைவர்களே!

தமிழின நலனுக்குப் பாடுபடும் கட்சிகள், இயக்கங்களின் மேனிலைத் தலைவர்கள் தன்னினக் கொள்ளைக்காரர்களாகவே இருக்கின்றனர்!

தமிழ்ச் செய்தித்தாள்களில் ஒன்றுகூட, தமிழ் மொழிக்காகவோ, இன நலனுக்காகவோ பாடுபடவில்லை!

வரலாற்று நிலையில் அழுத்தப்பட்ட ஓர் இனத்தின் உண்மை நிலை இவ்வாறு இருந்தால், அந்த இனம் தன்னை ஈடேற்றிக்கொள்வது மிகவும் கடினம்!

தமிழினம் முன்னேறுமைக்குரிய காரணங்கள் - பாவலரேறு அறிக்கை!

உலகம் முழுவதும், தமிழினத்திற்குப் பெரும் கேடுகள் உருவாகிக் கொண்டு வருகின்றன. ஆங்காங்குள்ள நாடுகளில் தமிழர்கள் நாடோடிகளாகத் துரத்தியடிக்கப்பட்டு வருகின்றனர். தங்கள் உரிமைகளையும், உடைமைகளையும் படிப்படியாக இழந்து வருகின்றனர்.

உலக மக்களிடையில் அரசியல், வாழ்வியல், இன மேம்பாட்டுக் கிளர்ச்சிகள் தொடங்கியுள்ளதால், அவ்வவ் வினங்கள் அவரவர் இன மக்களை மட்டுமே பேணவும் காக்கவும் ஆன, மன உணர்வில் வளர்ந்து வருகின்றன. எனவே, வேறு நாடுகளுக்குப் புதுப்புதுச் சிக்கல்கள் தோன்றியுள்ளன ஏதிலிகளாக, நாடோடிகளாக இன்று தமிழர்கள் நாடுவிட்டு நாடு ஓடிக்கொண்டு இருக்கின்றனர். உலக ஏதிலிகளில் முதல்நிலை ஏதிலியாக, எந்த நாட்டையோ, நிலப்பரப்பையோ உரிமை கொண்டாட முடியாத நிலையில் இன்று தமிழினம் உள்ளது. இதன் முதல் அவலக் கதைதான் இன்றைக்குத் தொடங்கி முடியாமல் இருக்கும் தமிழீழப் போராட்டம்.

இந் நிலையில், தமிழ்நாடு என்று கூறப்பெறும் நம் நிலத்தின் துயரப்பாடுகள் எவை எவை என்று பார்ப்போமானால், துன்பம் தொண்டையை அடைக்கிறது; நெஞ்சாங்குலையை நிறுத்துகிறது.

இங்குள்ள தமிழர்கள் எதைப்பற்றியும் கவலை கொள்ளாத மொழி இன, நாட்டுணர்வற்ற நிலையில் நசிந்து கொண்டு வருகின்றனர். இதைப்பற்றி அனைவரும் கவலைப்படுவது போல நடித்து நாடகமாடிக் கொண்டு வருகிறோமேயன்றி, ஒரு நிலையிலாவது நாம் ஒன்றுபட்டு, நம் இனநல முன்னேற்றத்தில் ஓரடி வைத்துவிட முடியாதவர்களாக ஆகி வருகிறோம்.

இங்குள்ள இயக்கங்கள், கழகங்கள் (நம் இயக்கம் உள்பட) அனைத்தும் வெறும் வாய்ப்பேச்சளவிலேயே, நாள்தோறும், மாதந்தோறும் மலை மலையான கருத்துகளை அள்ளிக் குவித்துக் கொண்டிருக்கிறோம். செயலளவில் ஓர் இம்மியையும் நகர்த்த முடியாதவர்களாகவே இருக்கிறோம்.

மேலும் மேலும் மாநாடுகள், கூட்டங்கள், பேரணிகள், ஊர்வலங்கள், கட்சி கட்சியாகச், சாதி சாதியாகத் தொழில் தொழிலாக நடத்திக்கொண்டு வருகிறோம். இவற்றால் யாருக்கு என்ன பயன் விளைந்துவிடப் போகிறது.

நம் இன முன்னேற்றத்திற்குப் பார்ப்பான் மட்டும் எதிரி அல்லன் வடநாட்டுக்காரன், பெரும் பெரும் பணமுதலாளிகள், மதத்தலைவர்கள், சாதித் தலைவர்கள், கட்சித் தலைவர்கள் அனைவருமே எதிராகச் செயல்பட்டு வருவதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். அவர்களின் தாறுமாறான செயலியக்கங்களை எவராலும் தடுத்து நிறுத்த முடியாதபடி இங்குள்ள நிலைகள் மிகவும் இறுகலாகிக் கொண்டு வருவதைப் பார்க்கிறோம். ஒருவர் கிழக்கே போனால் ஒருவர் மேற்கே, மக்களை ஓட்டிக் கொண்டு போக விரும்புகிறோம் இதற்காகவே கூட்டங்கள், மாநாடுகள், ஊர்வலங்கள் இங்கு நடக்கின்றன. ஓர் இயக்கத்தின் இரண்டு நாள் மாநாட்டுக்காக ஐந்து இலக்கம் பத்து இலக்கம் பணம் ஏழை மக்களிடையில் தண்டப்படுகிறது இல்லாத இயக்கங்கள் இல்லை; கோடிக்கோடியாக வைத்துக்கொண்டிருக்கும் இயக்கங்கள் தண்டுவதுதான் பெரும் மனத்துயரத்தைத் தருகிறது. மாநாட்டுக்கு வருபவர்கள் குடும்பம் குடும்பமாகக் கட்டுச்சோற்றைக்கட்டிக்கொண்டு வரும் ஏழை எளிய மக்களே! அவர்கள் தம் மடிகளில் கட்டி வந்துள்ள சிறு சேமிப்புகளை மாநாடுகளில் வந்து தலைவர்களுக்கு மாலைக்காகவும் அன்பளிப்பாகவும் அவிழ்த்துக் கொடுப்பது மனத்தை மிகவும் வருத்துகிறது. இஃது ஒருவகையான இன உள்ளரிப்பே. இப்படிப்பட்டமக்களை எவராலும்ஈடேற்ற முடியாது. மக்களுக்கான போராட்டங்களை ஆன்

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும்

[தொடர்-4]

தமிழீழ அரசியலில் அகப்புற அழுத்தங்கள்

— "குண" —

(4) பவுத்தத்தின் மீது தொற்றி நிற்கின்ற சிங்கள இனவெறி :

கறுப்பை வெளுப்பாக்கும் கலையில் கைத்தேர்ந்தது இந்தச் சிங்கள "சயனிசம்". இது வரலாற்றைத் தலைகீழாகப் புரட்டிக் காட்டித் தமிழின வெறுப்பையே தின்று வளர்ந்தது. துட்டகாமுனு காலத்திற்கு இலங்கை வரலாற்றைத் திருப்பித் தமிழினத்தின் மீது பழிவாங்குவதென்னும் கருத்தையே எருவாகக்கொண்டது. இச் சிங்கள இனவெறி, தமிழர்களையும் பவுத்தர்களாகவும், சிங்களர் மயமாகவும் செய்வதையே ஒரே நோக்கமாகக் கொண்டது. இதற்கு இடம், பொருள், ஏவல் தெரியாது. அதனால் கண்மூடித்தனமானது. தமிழரின் போலிகளை உட்செரித்துக் கொண்டு ஓரளவு தன்னாட்சியைத் தமிழரில் சுரண்டலர்களிடம் ஒப்படைப்பதென்னும் மிதவியல் தீர்வும் கூட இதற்கு ஓர் எட்டிக்காய். தமிழீழ விடுதலையின் கருவிப் போராட்டத்திற்குக் குழி பறிக்கவல்ல தமிழீழ முதலாளிய சூழ்ச்சிகளையும், ஒருசேர எதிர்ப்பதனால் உள்ளபடியே இதனுடைய மூட்டாள்தனம், காலம் போடுகின்ற கோட்டை மிகத் தெளிவாக வரைய உதவுகின்றது.

(5) அமெரிக்க அடிவருடி செயவர்த்தனாவின் சிங்கள இனவெறி :

தமிழர்களின் தரகர்களிடம் பேரம் பேசி வெல்ல ஒரு கால்; தமிழர்களை ஒழித்துக்கட்டி விடுவோமென அச்சுறுத்தி (1983 சூலை, இனப் படுகொலைக்குப் பச்சைக்கொடி காட்டியதுபோல்) அரசு கொடுநெறிய (பாசிச) வன்முறையை அவ்வப்போது ஏவி விடுவது என, மறு கால், என இண்டும் கெட்டான் நிலையில் செயவர்த்தன தத்தளித்து வருகிறார். அமெரிக்கா தன்னைக் கைவிட்டுவிடாதென்னும் குருட்டு நம்பிக்கை ஒரு படை வழித் தீர்வுபற்றிய கானல் நீரிடம் இவரை மயங்கச் செய்துள்ளது. ஓரளவு விட்டுக்கொடுப்பு நாடகம் ஆடப் பார்த்தால், பவுத்த சமயத் தலைவர்களிடமிருந்தும், சிங்கள வெறித் தீவிரர்களிடமிருந்தும் இவருக்குப் புற்றீசல்போல் எதிர்ப்பு கிளம்புகின்றது. சிறிது மசிந்தாலும் சிங்கள இனவெறிப்படை சிறில் மாத்யூ பக்கம் போய்விடுமோ என்னும் படைப் புரட்சியைப் பற்றிய அச்சம் வேறு இவருக்குத் தடை போடுகின்றது. திருவாட்டி பண்டாரநாயகா பக்கம், சிங்கள இனவெறி இடம் பெயர்ந்து விடுமோ என்னும் நடுக்கம் மறுபுறம் இவருக்கு. தமிழீழ விடுதலைக் கொள்கையில், மார்க்சியம் இருப்பதாக அரண்டும், அரட்டியும் அமெரிக்காவிடம் காசு கறக்கின்ற உத்தி வேறு, இவரை தாமே தட்டிவிட்ட இனவெறி புதைச்சேற்றிற்குள் தாமே மூழ்கும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

(6) சோவியத்து இந்தியச் சார்பு பண்டார நாயகாவின் இனவெறி :

சிங்கள இனவெறியில் குறையாத, பத்தரை மாற்றுத் தங்கம் இவர். முற்போக்கு முகமூடியணிந்த டிராட்க்கியர்களும், போலிப் பொதுவுடைமையர்களும் இவருடைய பரிவாரங்களாக இருந்தபோது. சிங்களம் மட்டுமே ஒரே ஆட்சிமொழியென்றும், புத்த மதமே ஆட்சி மதமென்றும் முரசு கொட்டித் தமிழ் ஒழிப்புக்குப் புதிய எழுச்சி சேர்த்தவர். இலங்கையில் உதிரிப் பாட்டாளியரையும், உதிரி முதலாளியரையும் அடிக்கோலாக வைத்துக்கொண்டு, இலங்கை அரசியலை உதிரிமயமாக்கி, முற்போக்கு என்னும் பெயரில் போனப்பார்ட்டிசத்தை வளர்க்க முயன்று தோற்று, இன்று குடியுரிமையையும் பறிகொடுத்து நிற்பவர் இவரேயாவார். இந்திராவும், உருசியரும் துணைக்கு வராது போவரா என ஏங்கிக் கூரை பார்த்து நின்ற இவர், அண்மையில் விடுத்த அறிக்கையே போதும், சிங்களர் யாவரும் புத்த சமயத் தலைமையின் கீழ் ஒன்று திரள வேண்டுமென இவர் கொப்பூதி இருக்கிறார். இதனால் அமெரிக்கச் சார்பு சிங்கள இனவெறியர் ஆட்சி இழந்து, சோவியத்து இந்தியச் சார்பு சிங்கள இனவெறியர் ஆட்சிக்கு வந்தாலும், தமிழின ஒழிப்புக் கொள்கை மட்டும் பின்வாங்கப் போவதில்லையென்பது உறுதிப்படுகின்றது.

(7) தமிழீழத்தில் தரகு முதலாளிய அரசியல் :

தமிழீழத்தின் மேட்டுக் குடியினரில் சிங்கள இனவெறியுடன் பேரம் பேசுவதற்காக வேண்டித் தமிழீழ விடுதலையென்னும் முழக்கத்தைப் பின்னர் ஏற்றுக்கொண்டனர். இலங்கை அரசினுடைய சிங்கள மயமாக்கக் கொள்கையால் வேலை வாய்ப்பு போன்றவற்றை இந்தத் தமிழ்க் குறு முதலாளியப் பிரிவினர் தங்களுடைய வருங்காலம் வெறுமையாவதைப் பார்த்தனர், அரசால் பதவியிலிருந்து கொண்டு தமிழ்த் தரகு வணிக வகுப்பினுடைய நலன்களைப் பேணி வந்த அதிகார வகுப்பைச்சேர்ந்த தமிழர்களும் கூட, சிங்கள இனவெறிக் கொள்கையால் தாக்கப்பட்டனர்; இத்தகைய நிலையில் தன்னாட்சியின் அடிப்படையிலான கூட்டாட்சி என்னும் கருத்தாக்கத்தைத் தழுவிப் போராடிப் பார்த்த, இப பிரிவினர் தமிழீழக் கோரிக்கையை ஏற்றுக் கொள்கின்ற காலமும் வந்தது. அதற்கான உத்தியாகப் பாராளுமன்ற வழியை இவர்கள் தழுவிக் கொண்டனர். ஆனால் தமிழீழத்தை அடைய ஒப்போலை வேட்டை உதவாது என்றறிந்த இளம் புரட்சியர்கள் எடுத்த நிலைபாடு இவர்களுக்கு ஒரு தடையாக இருந்தது. தீவிரரின் வலிமைதான் மிதவியரின் வலிமையென்னும் உரிமைக்கேற்ப, புரட்சி உணர்வும விடுதலை அணிகளும் பெருகப் பெருக, இவர்கள் பேரம் பேசுவதிலான வலிமையும் பெருகியது. இதனால் இவர்கள் மக்களிடம் மதிப்பிழந்தனர். இந்தியாவிடம் இவர்கள் காவடி தூக்கி வந்தனர். அதன்வழியாக வட்டரங்கு மாநாட்டிற்குப் போய், சிங்கள இனவெறி அரசுடன வட்டாடியும் பார்த்தனர்.

இந்தத் தரகு முதலாளிய அரசியலரின் குறுகிய பார்வையோ பிற்போக்கானது. தமிழர்களைக் கூறுபடுத்தி, மாற்றார் அவர்களுடைய அரசுரிமையைப் பறித்துக்கொள்ள வழிவகுத்த சாதிக் காழ்ப்புகளும் இவர்களைவிட்டபாடில்லை. அதனால் தம்முடைய சொந்த சாதிய முதலாளிய நலன்களைப பேணுகின்ற உள்நோக்கம் தமிழீழ மக்கள் அனைவரின் அவலத்தையும் அறுக்கவல்ல, வருங்காலத் திட்டம் இவர்களிடமில்லை. இந்த உண்மை உருவத்தை மறைக்க, அவ்வப்போது ஒப்புரவு (சோசலிச) முக்காடு போர்த்திக் கொண்டாலும், முதலாளிய முறையிலேயே சிந்திக்கப் பழகிவிட்டவர்கள் இவர்கள். இவர்களின் தலைமைக்கு விலை கொடுப்போர் இல்லாத நிலையில், இந்தியாவை மன்றாடித் தவம் கிடந்தால், தாங்கள் அரியணை ஏற்றப்படலாம் என்னும் போலிஉணர்வுடன் இவர்காலம் தள்ளுகின்றனர்.

போதாமைக்கு, மலையகத் தமிழர்களையும், முசுலிம் தமிழர்களையும் தழுவிய விடுதலையில் இவர்கள் அக்கறை காட்டவில்லை. அதனால், மக்களையெல்லாம் ஒன்றுபடுத்தி உண்மையான குமுக விடுதலையை நோக்கி இட்டுச் செல்கின்ற உளப்பாடும், கொள்கையும் பக்குவமும், திறனும் அற்றவர்கள். கூறப்படும் "இந்தியத் தீர்வு" தமிழீழத்தின்மீது திணிக்கப்பட நேர்ந்தால், எதிர்ப்புரட்சியாளராக மாறி தம் இனத்தையும், இறைமையையும் இழக்கவல்ல அகப் பகைவர்களாகப் போகக் கூடியவர்கள்.

(8) தமிழீழ விடுதலை வேட்கையில் குளிர் காய்கின்ற தமிழகத்தில் இருக்கின்ற தமிழ்த் தேசியக் கட்சிகள் :

தனி நாடு கேட்டு, எட்டி எட்டிப் பார்த்து, அந்தப் பழம் புளிக்கும் எனக் கைவிட்டு விட்டுத் தில்லியுடன்உறவு கூட்டுக் கொள்ளையில்பங்காளி உரிமை என்னும் நொண்டிச் சாக்கில் நிற்கின்ற திராவிடக் கொள்கை வழிக் கட்சிகள், தமிழகத்தில் முகாமையானவை. தமிழீழத்தின் இன்னல்களையே அரசியலாக்கிக்கொண்டு, அவை புதிய தெம்பைப் பெற்று வருவதையும் பார்க்கின்றோம். தாய்த் தமிழகத்தையே தில்லித் துணை வல்லரசிடம் அடகு வைத்துவிட்டுத் தன்னுடைய தாயகத்தின் தலையை அறுக்காமல், அருகிலிருக்கின்ற தமிழீழத் தமிழர்களின் அடிமைத் தளையை உடைக்க சங்கூதுகின்ற அரசியலர்கள் இவர்கள். முன்னவர் போவார்; தனக்கு ஒன்னாத தமிழனை ஒழிக்க, இந்திராவிடம் அடி பணிவார். பின்னர், பின்னவர் போவார்; அன்னை இந்திராவின் கையை வலுப்படுத்துவார். அந்த இரு சாராரும், தமிழகத்தின் தன்மானத்தைத் தில்லியிடம் அடகு வைத்துப் பார்ப்பனீயமென்னும் இந்து வெறியைத் தழுவிய பாரதக் கொள்கையில் முக்கி முக்குவித்து நிற்பர். இடையிடையே, தமிழீழத் தமிழர்களின் இன்னலைத் துடைக்க இந்தியாவைப் படையெடுக்கச் சொல்லி, விழவெடுத்து முழங்குவர் ஒரு சாரார் இல்லை கூச்சல் குழப்பமின்றிக் காவடி தூக்கினால், தில்லி இலங்கைத் தீவின் மேல் படையெடுத்துச் சிங்களப் பகை முடிக்கும் என்பர் மறு சாரார். இடையே கையில் ஒரேவொரு வேல் தாங்கிக் கடல் கடப்பேன் எனச் சொல்லிக் கூட்டம் கூட்டிக்கொண்டு போய், தில்லிக்காரர் தடுத்துவிட்டாரெனச் சொல்லி திரும்புவார் ஒரு சிறு தலைவர். வெறும் வாயை மென்றுகொண்டிருப்பவர்களுக்குத் தமிழீழத் தமிழர்களின் இன்னல்கள் நல்ல அவலாக வாய்த்துவிட்டது.

இவை யாவும் எதிர்மறை விளைவுகள்தாம். ஆயினும் அவற்றிலும் ஒரு நேர் மறை பயன் விளைந்தது. இலங்கையில் நடந்த 1983-ஆம் ஆண்டு, சூலை இனப்படுகொலை, தமிழக மக்களிடம் உசுப்பிவிட்ட உணர்வலைகளைக் கண்டு அஞ்சித் தில்லித் துணை வல்லரசோ, தமிழக அடிமை அரசோ, தமிழகத்தில் அடைக்கலம் புகுந்துள்ள விடுதலைப் புரட்சியரைப் பிடித்துச் சிங்கள இனவெறியரிடம் ஒப்படைக்க முடியாத ஒரு சூழலை அஃது உருவாக்கித் தந்தது. இதனால், தமிழீழப் புரட்சியர்கள் தமிழீழத் தமிழர்களைத் தங்களுடைய புரட்சியின் பின்புலமாகச் செய்து கொள்கின்ற வாய்ப்பும் பெருத்தது.

(தொடரும்)

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

15) இந்தியாவில் சீக்கியவர்கள் வாழ்வதற்கு முழுப்பாதுகாப்பும் உரிமையும் இருந்தும், அவர்களில் சில தீவிரக்காரர்கள் தனிநாடு கேட்பதற்கான காரணம் தங்கள் சீக்கிய மதத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்பதாகத்தான் தெரிகிறது.

இலங்கையில் தமிழர்களுக்கு உரிமையும் இல்லை; பாதுகாப்பும் இல்லை ஈழத்தமிழர்கள் உயிர் வாழ்வதற்குக் கூட உறுதி இல்லை எந்த நேரத்திலும் படைத்துறை வரலாம். எந்தத் தமிழனும் கொல்லப்படலாம், எந்தத் தமிழ்ப் பெண்ணும் படைத்துறையினரால் இழுத்துச் செல்லப்பட்டுக் கற்பழிக்கப்படலாம்; என்ற அவல நிலையில் ஈழத்தமிழர்கள் தங்களை உயிருக்கு அஞ்சி அஞ்சி, அடிமை வாழ்வு வாழும் நிலையில் தள்ளப்பட்டிருக்கின்றனர். 'தமிழர்கள் எல்லாரும் எம் பகைவர்கள். அவர்களைப் பூண்டோடு அழிப்பேன்' என்று கொக்கரித்துக் கொண்டு, தமிழ் இனத்தை அழித்துக் கொண்டிருக்கின்றார். செயவர்த்தனா.

இந்தியாவில் சீக்கிய இனம் பெற்றுள்ள உரிமையும், பாதுகாப்பும், நல்வாழ்வும், சம மதிப்பும், மொழிவழி மாநிலமும் ஈழத்தமிழர்களுக்கு இலங்கையில் கொடுக்கப்பட்டிருந்தால் ஈழத் தமிழர்கள் இலங்கையை விட்டுப் பிரிந்து போக வேண்டுமென்ற நிலை ஏற்பட்டிருக்காது. அவ்வகை எண்ணம் கூட அவர்களுக்குத் தோன்றியிருக்காது.

இந்த அவல நிலையை மாற்ற, இந்தியத் தலைமையமைச்சர் இந்திராகாந்திகூட இலங்கையிலே தமிழர்கள் உரிமையாகவும், பாதுகாப்பாகவும் வாழ்ந்து முன்னேற ஒரு மாநில அமைப்பை ஏற்படுத்திக் கொடுத்துவிட வேண்டுமென்று விரும்பினார். அப்படி ஒரு மாநில அமைப்பை ஈழத்தமிழர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும்படி செயவர்த்தனாவிற்குக் கருத்துக் கூறினார்.

செயவர்த்தனா, இந்திரா காந்தியின் அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை ஈழத் தமிழர்களுக்கு மாநில அரசை ஏற்படுத்திக் கொடுக்கவோ, அவர்களைப் பாதுகாக்கவோ நடவடிக்கை எடுக்கவில்லை. அதற்கு மாறாக, ஈழத் தமிழர்களைப் பூண்டோடு அழித்துவிடத் திட்டம் தீட்டிச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். இலங்கையில் தமிழர்கள் உயிருடன் வாழ முடியாது என்ற நிலையை உருவாக்கியுள்ளது இலங்கை அரசு.

இந்த நிலையில் ஈழத் தமிழர்கள் தங்கள் உயிரையும், உடைமைகளையும், மானத்தையும் காப்பாற்றிக் கொள்ள உரிமை ஈழத்தமிழ் நாடு அடைவதைத் தவிர வேறு வழியில்லாமல் போய்விட்டது. அதனால் அவர்கள் ஈழத் தமிழ்நாடு உரிமை பெறப் போராடிக்கொண்டிருக்கின்றனர். இத்தகைய அவலநிலை இந்தியாவிலுள்ள சீக்கியர்களுக்கு இல்லை.

இந்த நிலைமைகள், 'ஈழத்தமிழர் சிக்கலும் சீக்கியர்களின் சிக்கலும் ஒன்றல்ல; அவை இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகள் மலைக்கும், மடுவுக்கும் இடையேயுள்ள வேற்றுமை போன்றதாகும்'' என்பதைத் தெற்றென விளக்குகின்றன.

ஈழத்தமிழர்களைக் காட்டு விலங்காண்டித்தனமாக கொன்று குவிப்பதை மறைப்பதற்காக ஈழத்தமிழ் விடுதலைப் போராட்டக்காரர்கள்,பஞ்சாபில் காலித்தான் கேட்டும், சீக்கிய வன்முறையாளர்கள் போன்றவர்கள்' என்றுகூறி, உலகத்தை ஏமாற்றுவதற்காகக் கருத்துப்பரப்பல் செய்து கொண்டிருக்கின்றனர் செயவர்த்தனாவும் அவருடைய அமைச்சர்களும்.

செயவர்த்தனா செய்யும் அதே கருத்துப்பரப்புதலைச் செய்து தமிழகத்திலே 'தங்களைத் தமிழர்கள் என்றுகூறிக்கொண்டே தமிழர்களுக்குக்குழிபறித்துக் கொண்டிருக்கும் கும்பலும்' தமிழர்களை ஏமாற்றிக் குழப்பிக் கொண்டிருக்கின்றது.

தமிழர்கள் இதை உணர்ந்து ஈழத்தமிழர்களைக் காக்கும் நடவடிக்கையில் இறங்க வேண்டும்.

தமிழர்கள் எல்லோரும் கத்திகளையும், துமுக்கிகளையும் தூக்கிக்கொண்டு இலங்கை நோக்கிச் செல்ல வேண்டியதில்லை: தங்கள் அறிவைத் தீட்டி ஈழத் தலைவர்களைச் சாக்க விரும்புபவர்களிடம் தமிழக மாநில ஆட்சியை ஒப்படைத்தாலே, ஈழத் தமிழர்கள் காப்பாற்றப்பட்டு விடுவார்கள்.

எம். சி. இராமச்சந்திரனும், அவரை ஆதரிப்பவர்களும் ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற எந்தவகை நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், நடவடிக்கை எடுப்பது போன்று நடித்துக் கொண்டிருக்கின்றனர். அதைத் தமிழர்கள் புரிந்துகொண்டு தமிழக ஆட்சி இருக்கையிலிருந்து அவர்களை இறக்குவதுதன், ஈழத் தமிழர்களைக் காப்பாற்றத் தமிழர்கள் எடுக்கும் முதல் நடவடிக்கையாகும்.

(முற்றும்)

தமிழ்த்தேசியப்போராட்டம்தொடங்கிவிட்டது!

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-3 இதழ் எண் : 60 (7-7-1985) பகுதி 23-24

இராசீவ் காந்தி, எப்படிப் பட்டவர்?

'இராசீவ் காந்தி இளைஞர்; புதுமை நோக்குள்ளவர்; அறிவியல் ஆர்வத்துடன் செயல்படுகிறார்; எனவே இவரின் தாயார் ஆண்ட காலத்தைவிட, இந்தியா, இவர் காலத்தில் நிறைய முன்னேறுவதற்கு வாய்ப்புகள் உள்ளன' – என்று இராசீவ் காந்தி ஆட்சியில் அமர்ந்த தொடக்கத்தில் அரசியல்நோக்கர்கள் ஒருசிலர் எண்ணினர்.

ஆனால் இவரின் படிப்படியான செயற்பாடுகள், இவர் நாட்டின்மேல் கொண்ட அக்கறையையும் ஆர்வத்தையும் விட, தம்முடைய சாய்காலை அதிகப்படுத்திக் கொள்ளவும், உலக அரங்கில் தமக்கொரு நிலையான இடத்தைப் பெற்றுக் கொள்வதிலுமே மிகவும் துடிப்பாக இருக்கிறார் என்பதையே வலியுறுத்திக் காட்டுகின்றன.

பதவிக்கு வந்தவுடன், இவர் தமக்குத் தடையாக இருக்கும் பழம் பெருந்தலைவர்கள் சிலரைத் தம் வழியில் இருந்து அப்புறப் படுத்திவிட்டுத் தமக்குகந்தவாறு, தம் போக்குக்கு இயைபான தலைவர்களையும் அதிகாரிகளையும் துணையாக்கி நெருக்கமாக வைத்துக் கொண்டார். ஏற்கனவே நாட்டிலுள்ள பஞ்சாப், அசாம் சிக்கல்களை, உடனே கவனஞ் செலுத்தாமல், மெத்தனமாக இருந்து ஆறப்போட்டதுடன், அவ்வப் பகுதிகளின் எழுச்சிகளை வன்முறைகளைக் கொண்டும், கருப்புச் சட்டங்களைக் கொண்டும் அடக்கி ஒடுக்க முற்பட்டும், போராட்டக்காரர்களில் பலரை ஈவிரக்கமின்றிக் கொன்று குவித்தும் வருகிறார்.

தமிழீழச் சிக்கலைத் தீர்ப்பதில் ஆர்வம் காட்டுபவரைப் போல, மறைமுகமான அரசியல் வலிமை பெறும் வாய்ப்புகளை இலங்கைத் தலைவர் செயவர்த்தனாவுக்கு ஏற்படுத்திக் கொடுத்தார். பலகோடி உருபா மதிப்புப் பெறும் போர்க் கருவிகளைக் கொண்ட வானூர்தி, இலங்கைக்குச் செல்லும் வழியில், திருவனந்தபுரத்தில் இறங்கியபொழுது, **'அவற்றில் என்ன, தமிழர்களைக் கொல்லுவதற்கான கருவிகள் என்றா எழுதப் பட்டிருக்கிறது'** என்று கேட்டு, அவ் வானூர்தியைக், கன்னெய் நிரப்பி, எந்தவகை ஊறுபாடும் இன்றி இலங்கைக்கு அனுப்பி வைத்த ஒரு செயலே, இலங்கையில் நடக்கும் தமிழினப் படுகொலையை அவர் நிறுத்த விரும்பவில்லை என்பதைக் காட்டும் போதுமான சான்றாகும்.

அரசியல் தந்திர முறையுடன், உருசியாவுடனும், அமெரிக்காவுடனும், நடுநிலைத் தொடர்பு கொண்டவர்போல், அண்மையில் உருசியாவுக்கும் அமெரிக்காவுக்கும் தம் வெளிநாட்டுச் செலவை மேற்கொண்டதும், அதன் விளைவுகளும், அவர் ஒரு பெரிய அரசதந்திரியைப் போல் காட்டினாலும், அங்குள்ள தலைவர்களிடம் அவர் தமக்கமாகப் பல செய்திகளைப் பேசி வந்த செயல் அவர் இந்தியத்தேசிய இன நலன்களுக்கு உகந்தவராக இல்லையென்பதையே காட்டுகிறது. அத்துடன் இந்தியத் தேசிய இன எழுச்சிகளை அவர் ஒடுக்குவதற்கு, அந் நாடுகள் துணைநிற்கும் என்று அந் நாட்டுத் தலைவர்களும் பிரிட்டிசுத் தலைமையமைச்சரும் வெளிப்படையாக உறுதியளித்திருப்பதிலிருந்தே அவருடைய வெளிநாட்டுச் செலவின் நோக்கம் என்னவாக இருக்கும் என்பதை உய்த்துணர்ந்து கொள்ள முடியும். இனி, இவர் அமெரிக்க முதலாளிகளுக்குவேறு, இந்தியாவில் வந்து தொழில்களைத் தொடங்கும்படி அழைப்பு விடுத்த செய்தி மேலும் மேலும் இவர் வெளிநாட்டு வல்லரசுகளுக்கும், தாகு முதலாளியக் கொள்ளையடிப்புக்குமே துணைபோக விரும்புவதைத் தெளிவாகக் காட்டுகிறது.

இனி,அமெரிக்கச் செய்தியாளரிடையில் இவர் பேசும் பொழுது, அவர்களுக்களித்த ஒரு விடையில், 'இந்திய நிகரமை (சோசலிச)க் கொள்கை உருசியாவுடையதோ, அமெரிக்காவுடையதோ, அல்லது வேறு எந்த நாட்டுடையதோ அன்று; அஃது ஒருவகைத் தனிப் பாணியில் அமைந்தது' — என்று கூறியிருப்பது, இந்தியாவில் மத முறையிலான பார்ப்பனிய ஆட்சியை நிலைநிறுத்தும் இவர் விருப்பத்தையே உறுதிப்படுத்திக் காட்டுகிறது.

இவையெல்லாவற்றையும் விட. இவர் அண்மையில் செய்தியாளர் கூட்டத்தில், நெருக்கடி நிலைமேல் இவர் கொண்ட நம்பிக்கையையும், விருப்பத்தையும் தெளிவாக வெளிப்படுத்திய செய்தி, நம்மையெல்லாம் அதிர்ச்சியுற வைத்திருக்கிறது. அவர் தம்மை நிலைப்படுத்திக் கொள்ள எத்தகைய நிலையையும் கொடுமையையும் கூட மேற்கொள்ளத் தயங்காதவர் என்பதையே இது காட்டுகிறது.

இவற்றையெல்லாம் ஊன்றிக் கவனிக்கையில், இராசீவ் காந்தியைவிட இந்திராவே எவ்வளவோ நல்லவர் என்று எண்ணும்படி இவர் நடவடிக்கைகள் இருக்குமோ என அஞ்ச வேண்டியுள்ளது. இதன் வழி, இந்தியாவுக்கு நேர்ந்த இக் கொடுமையான அரசியல் அச்சுறுத்தம் என்று நீங்குமோ என்று ஏங்க வேண்டியுள்ளது. அந்த அளவுக்கு இராசீவ் காந்தி கொடியவராகி விடுவாரோ? பொறுத்திருந்து பார்ப்போம்!

(-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பவர்களிடம் வைத்துக் கொள்ள வேண்டுமே தவிர மக்களிடமே வைத்துக் கொள்ளக் கூடாது. கருத்துகளை விளக்க மாநாடு தேவைதான். ஆனால் கடவுள் இல்லை என்னும் கருத்துகளையே சொல்லிக் கொண்டிருப்பதற்கு எதற்கு மாநாடுகள்? கடவுள் இல்லை என்பதற்கு ஒரு கட்சி என்றால் கடவுள் உண்டு என்பதற்கு ஏன் கட்சி வைத்துக்கொள்ளமாட்டான்? கடவுள் உண்டு இல்லை என்பது உலக மக்களின் சிக்கல்; தமிழினச் சிக்கல் இதுவன்று. இழந்துபோன அரசியல், பொருளியல், மொழி, இன, பண்பாட்டு உரிமைகளை மீட்பதே நாம் இப்பொழுது தீர்வு காண வேண்டிய செய்திகள். கடவுள் இருந்தால் இருந்து விட்டுப் போகட்டும்; இல்லாமற் போனாலும் போகட்டும்; தமிழர்களுக்குரிய தனிச்சிக்கலன்று இது; உலகத்துக்கே உரிய, அறிவாளிகளுக்குரிய சிக்கலை எடுத்துக் கொண்டு தமிழினத்தை எப்படி முன்னேற்றுவது?

அதுபோல் திருக்குறளையும் சிலர் மத நூலாகப் பார்க்கின்றனர். திருக்குறள் ஒரு வாழ்வியல் நூலே; வழிபாட்டு நூலன்று. தெளிவான வாழ்வியல் கருத்துகளாலன்றி, வெறும் நூல் வழிபாட்டால் ஓர் இனம் முன்னேறிவிடாது; இனம் இருந்தால்தான் சமயம், மொழி, கலை, பண்பாடு அனைத்தையும் காத்துக்கொள்ள முடியும். இனத்தை இழந்துவிட்டு மொழியை இழந்துவிட்டு நாட்டு, அரசியல், பொருளியல் உரிமைகளை இழந்துவிட்டு, வெறும் கருத்துகளையும் அவை கூறும் நூல்களையும் மட்டும் வைத்துக் கொண்டு எவரும் செயல்களை உருவாக்கிவிட முடியாது.

தமிழின முன்னேற்றத்திற்கு இப்பொழுது அடிப்படை உரிமைகள் தேவை. தமிழ்நாட்டில் தமிழன் வாழ முடியவில்லை; படிக்க முடியவில்லை. தமிழில் பேசிப் பழகிப் படித்து முன்னேற முடியவில்லை. இப்பொழுதே தமிழன் தமிழனாக இல்லை. இன்னும் ஐம்பதாண்டுகள் போனால், தமிழ் இருக்கும் தமிழன் இருக்கமாட்டான். மேலும் ஓர் ஐம்பதாண்டுகள் போனால் தமிழ் என்பது நூல்களில் மட்டுமே இருக்கும்; பேச்சில் இருக்காது,

இந்த நிலைகளையெல்லாம் நேருக்கு நேராகப் பார்த்துக்கொண்டும், உணர்ந்து கொண்டும், பணத்துக்குப, பதவிக்கும் கட்சிகள் நடத்திக் கொண்டிருக்கின்றனர் தமிழர் தலைவர்கள்.

இவற்றை இளைஞர்கள் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். திசைமாறிப் போய்க் கொண்டிருக்கும் அவர்கள் தமிழ்மொழியின் பக்கமும், தமிழின ஒற்றுமையின் பக்கமும், தமிழ்நாட்டு விடுதலையின் பக்கமும் திரும்பி நின்று, முயற்சி செய்தால் தவிர, இலங்கையில் ஏற்படுவது போலும், ஒட்டுமொத்தமான இன அழிவு என்பது, இந்தியாவிலும் தடுக்க முடியாததாகிவிடும்.

இங்குள்ள மதங்களும், சாதிகளும் போதாதென்று, தலைக்குத்தலை, ஆளுக்கு ஆள், கட்சிக்குக் கட்சி, தமிழர்களைப் பலநூறு கூறுகளாகப் பிரித்துக் கொண்டு போராட்டம், மாநாடு, பேரணி, சீரணி என்று பல நாடகங்களைப் போட்டு வருகின்றனர் இங்குள்ள தலைவர்கள்.

பிறந்த நாள் கொண்டாட்ட ஆசை, துறவிகளாக -முனிவர்களாகத் தங்களைக் கூறிக் கொண்டிருப்பவர்களையும் விட்டபாடில்லை. அரசியலில் மக்கள் எவ்வாறு உண்மைக்கும், போலிக்கும் வேறுபாடு தெரியாமல் இருக்கிறார்களோ, அப்படியே மதத்தில், மொழியில், பண்பாட்டில், பொருளியலில் கூட மக்கள் உண்மையுணராமல் இருக்கிறார்கள். அனைத்திலும் கவர்ச்சிகளே முன் நிற்கின்றன. மேனுமினுக்கிகளே மேலுக்கு வருகின்றனர்.

தமிழர்களுக்கு மொழியுணர்வை ஊட்டினால்தான் இனவுணர்வு வரும். வெறும் இனவுணர்வை மட்டுமே தனித்துப் பிரித்து, எந்த மக்களினத்திடையிலும் ஊட்டிவிட முடியாது.

நம்முடைய வாய்ப்புக் குறைவு என்னவென்றால், இன்றுள்ள தமிழினத்தை, இங்குள்ள அரசியல் தலைவர்களே, தங்களின் தந்நல வேட்கைக்காக, ஒன்று சேரவிடாமல் தடுத்துக் கொண்டுள்ளனர். தமிழின நலனுக்குப் பாடுபடுவதாகக் கூறிக் கொண்டிருக்கும் இயக்கங்களும், அவற்றின் தலைவர்களும் தன்னினக் கொள்ளையர்களாக இருக்கின்றனர்.

அவர்களுக்குகந்தபடி ஆளுக்கொரு, செய்தித்தாளைத் தங்கள் போக்குக்குத் துணையாக்கி வைத்துக் கொள்கின்றனர். அவையோ, திரைப்படச் சாக்கடையையும், அரசியல் நரகலையும் கலந்து மக்களைச் சீரழிக்கின்றன. சிந்தனைத் திறமற்றவர்களாக்குகின்றன. இங்குள்ள தமிழ்ச் செய்தித் தாள்களில் ஒன்றுகூட, தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவோ, இன நலனுக்காகவோ, அல்லது பொது அறிவு விளக்கத்திற்காகவோ ஒரு துளியும் பாடுபடவில்லை.

வரலாற்று நிலையில் அழுத்தப்பட்ட ஓரினத்தின் உண்மை நிலை இவ்வாறு இருக்குமானால், அந்த இனம் தன்னை எவ்வாறு ஈடேற்றிக் கொள்ள முடியும்? அது மிக மிகக் கடினம்.

எனவே, தமிழர்கள் தங்கள் முன்னேற்ற நலன்களுக்கும், உரிமை வேட்புக்கும் தடையாகவுள்ள சாதிகள். மதங்கள், கட்சிகள் முதலிய அனைத்துக் கட்டுப்பாட்டு அடிமை நிலைகளிலிருந்தும் வெளியேறி, தமிழக விடுதலை உணர்ச்சியை வளர்த்தெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம். எண்ணிப் பார்ப்பார்களாக.

— பெருஞ்சித்திரனார்

தமிழீழத் தொடர்பான 'கலந்துரையாடல்'

பல்லடம் திருக்குறள் மன்ற உறுப்பினர்களும் பொறுப்பாளர்களும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகச்செய்தித் தொடர்புத் துறைத் தலைவர் தோழர். திவாகரன் அவர்களும் கடந்த 1-6-85 அன்று பல்லடம் திருக்குறள் மன்றத்தில் கலந்துரையாடினார்கள். தோழர். திவாகரன் அவர்களுடன் தோழர் வசந்தனும் மெய்க்காவலர் ஒருவரும் வந்திருந்தனர். இரவு 7-30 மணியளவில் மன்றச் செயலர். திரு. தென்மொழி ந. முத்துக்குமரனார் வந்திருந்த அனைவரையும் வரவேற்று அமர்த்தார்.

பின் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகச் செய்தித் தொடர்புத் திணைக்களத்தலைவர் தோழர். திவகாரன் நீண்ட, தெளிந்த வரலாற்று நிலையியல் உரையாக தமிழீழம் பற்றி விளக்கியும் அங்கிருக்கும் அகப்புற நிலைச்சூழல்களும் மக்களை அணியப்படுத்தியுள்ள பாங்கு குறித்தும் விளக்கினர். அவருரையில் வெளியான சில முக்காமையான செய்திகள் பின்வருமாறு:

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகச் செயல் தலைவர் தோழர். முகுந்தன் அவர்கள் கடந்த மாதத்தில் 27 பொதுக் கூட்டங்களில் பேசியிருக்கிறார். இரண்டாயிரத்திற்கும் அதிகமான, பயிற்சிகள் நிறைவு பெற்ற, போராளிகள் தமிழீழப் பகுதிகளில் விரவி மக்களைப் போருக்கு அணியப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தமிழீழம் தவிர மற்ற நாடுகளில் எட்டாயிரம் பயிற்சிபெற்ற போராளிகள் போருக்கு அணியநிலையில் அணிவகுத்துள்ளனர். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் செய்த சிங்களப் பகுதித் தாக்குதலில் ஒவ்வொன்றும் ஒன்றரை இலக்கம் உருபா (இலங்கை உருபா) மதிப்புள்ள 48 புதுவகைத் துமுக்கிகளைக் கவர்ந்து வந்துள்ளனர். ஒரு வைப்பகத்தில் நாலரைக் கோடி உருபாவைக் கைப்பற்றி வந்துள்ளனர். மலையகத் தமிழர்களையும் தமிழீழப்போருக்கு அணியப்படுத்தி வருகிறார்கள். சிங்கள அரசால் தூண்டிவிடப்பட்ட முசுலிம்—தமிழ் நலத்தை பெரும்பாலான முசுலிம் போராளிகளே அடக்கி 'எப்போதும் போன்ற' நிலைக்கு கொணர்ந்துள்ளனர். மேலும் தமிழீழப் பகுதிகளில் உள்ள வளம் பற்றிய அன்பர் ஒருவரின் கேள்விக்குத் தோழர் திவாகரன் பின்வருமாறு விடையுரைத்தார். 'திரிகோணமலைக்கு அண்மையிலுள்ள இடங்களில் விளையும் நெல்லே எமது முழுத் தமிழீழப் பகுதிக்கும் போதுமானதாகும்'.

மின்வளம் நீர்வளம் குறித்து அன்பர்கள் கேட்ட கேள்விக்கு தோழர். திவரகரன் அவர்களின் விடை:

'எமது எல்லைப்பகுதியில் உள்ள மலைத் தொடர்களில் இருந்து வரும் ஓடைகளே எமது நீர்வளம். யாழ்ப்பாணப் பகுதியில் எவ்வகை நீர்வளமும் இல்லை என்றாலும் அங்குள்ள கடல்நீரைத் தூய்மைப்படுத்தி அவற்றால் மின்உற்பத்தி செய்வதோடு பாசனத்திற்கும் அதைப் பயன் கொள்ளலாம். எல்லாவற்றிலும்விட எமது பரந்துபட்ட கடல்கரையை வைத்து எமது மீன்பிடி தொழில் மிகச் சிறப்பாக நடந்தேறும்'.

மேலும் அன்பர்கள் பலர் பல பயனுள்ள வினாக்களைத் தொடுக்க அதற்கும் மிகவும் தெளிவாக விடைகளை விடுத்தார். மதிப்பிற்குரிய தோழர் திவரகரன் அவர்கள் கலந்துரையாடல் (1 மணியளவில் மன்றச் செயலர் தென்மொழி ந.முத்துக்குமரனார் நன்றிகூற இனிது நிறைவுற்றது.

செய்தி— த. கவினரசு, பல்லடம்

நெல்லை வானொலியில் "ஐயை"

வில்லிசை ஆசிரியர். அதியமான் அவர்கள் அமைத்த பாவலரேறு அவர்களின் 'ஐயை' பாவியத்தின் வில்லிசை வடிவம் திருவாட்டி செல்வத்தாயம்மாள் என்னும் திரவியத்தம்மாள் அவர்களால் நெல்லை மாவட்டத்திலுள்ள ஊர்கள் பலவற்றிலும் நிகழ்த்திக் காட்டப் பெற்று வருவது, அன்பர்கள் அறிந்ததே. இவ் வில்லிசை நிகழ்ச்சி, தொடக்கத்தில் நெல்லை உ.த.மு.க. அமைப்புக் கூட்டத்தில் பாவலரேறு அவர்களின் முன் அரங்கேற்றம் பெற்றது. இந் நிகழ்ச்சி வரும் 25-7-85 காரி இரவு 8 மணிக்கு நெல்லை வானொலியில் நேரிடையாக ஒலிபரப்பப் படவிருக்கிறது. அந்நிகழ்ச்சியை அன்பர்கள் தவறாமல் கேட்டு,அதுபற்றிய கருத்துகளைத் தமிழ்நிலம் இதழுக்கு எழுதி விடுக்குமாறு கோரப் பெறுகிறார்கள்.

— அமைச்சர்

(தொடர்-2) (முன்னிதழ்த் தொடர்ச்சி)

தமிழீழ விடுதலைப் போராட்டமும், கலிசுத்தான் விடுதலைப் போராட்டமும்!

(ஓர் ஒப்பு நோக்கு)

- மலர்மாறன் -

9) பஞ்சாபில் தீவிர நடைமுறையாளர்கள் கலிசுத்தான் கேட்டு வன்முறைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தாலும், இந்திய அரசு பஞ்சாப் மக்களைக் கொடுமைப்படுத்தவோ அல்லது சீக்கியர்கள் எல்லாம் இந்தியாவின் பகைவர்கள் - அவர்களைப் பூண்டோடு ஒழிப்போம் என்றோ கூறி அவர்களை வலியுறுத்தும் செயல்களையோ செய்யவில்லை. அதற்கு மாறாக, பஞ்சாப் மக்களும் இந்தியர்கள்தாம் - அவர்களைக் காப்பது தனது முழு முதற்கடமை என்று கருதி இந்திய அரசு அவர்களுக்கு முழு பாதுகாப்பும் கொடுத்து வருகின்றது.

ஈழத்தில் உள்ள தமிழர்கள் எல்லோரும் மக்களின் பகைவர்கள் என்று இலங்கை அரசின் தலைவர் செயவர்த்தனஅறிவித்திருக்கின்றார். ஈழத் தமிழர்களைப் பூண்டோடு ஒழித்துக் கட்டுவேன் என்று கூறித் திட்டமிட்டு ஆயிரமாயிரம் தமிழர்களைப் படுகொலை செய்து கொண்டிருக்கின்றார். தமிழ்ப் போராளிகள் மட்டுமன்று ஒன்றுமறியாத் தமிழர்களையும் கொன்று குவித்துக் கொண்டேயிருக்கின்றார்.

10) இந்தியாவில் சீக்கிய மாணவர்கள் மற்றவர்களை விட அதிக மதிப்பெண்கள் எடுத்தால்தான், வேலைக்கோ அல்லது மேற் படிப்பிற்கோ எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்ற நிலையில்லை. மற்ற மாநிலத்துக்காரர்களுக்குச் சமமாகச் சீக்கிய இளைஞர்களும் மதிக்கப்பட்டு வேலையில் அமர்த்தப்படுகின்றனர்; படிப்பதற்குத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.

இலங்கையில் தமிழ் மாணவர்கள், சிங்கள மாணவர்களுக்குச் சமமாக மதிக்கப்பட்டு, வேலை வாய்ப்புகளுக்கும் மேற் படிப்பிற்கும் தேர்ந்தெடுக்கப் படவில்லை. சிங்கள மாணவர்களைவிடத் தமிழ் மாணவர்கள் அதிக எண்கள் எடுக்கவேண்டும் என்று கூறி ஒதுக்கித் தள்ளப்படுகின்றனர். தமிழ் இளைஞர்களை ஒதுக்கித்தள்ள இப்போது அவர்கள் ஒரு தந்திரத்தைக் கையாளுகின்றனர். 60 விழுக்காடு மதிப்பெண் எடுத்த சிங்கள மாணவனுக்கு இணையாக, ஒரு தமிழ் மாணவன் கருதப்பட வேண்டுமென்றால், அந்தத் தமிழ் மாணவன் 85 விழுக்காடு மதிப்பெண் எடுக்க வேண்டும் என்ற அளவுகோள்தாம் அத் தந்திரமாகும். 60 மதிப்பெண்கள் பெற்ற சிங்கள மாணவனும், 84 மதிப்பெண்கள் பெற்ற தமிழ் மாணவனும் மேற் படிப்பிற்காக வேண்டுகை விடுத்தால், குறைந்த மதிப்பெண்கள் பெற்ற அச் சிங்கள மாணவன் தான் தேர்ந்தெடுக்கப் படுகின்றான். இப்படி எத்தனையோ தந்திரங்களைக் கையாண்டு தமிழ் இளைஞர்களை ஒதுக்கிப் புறக்கணித்துக் கொண்டிருக்கிறது சிங்களவர்களின் இலங்கை அரசு.

(இந்தியாவில் தாழ்த்தப்பட்டவர்களுக்காகவேலைகளில் சேர இட ஒதுக்கீடு செய்துள்ளதை இத்துடன் ஒப்பிட்டுக் குழப்பிக் கொள்ளக்கூடாது. ஏனெனில், இந்தியாவில் எல்லா மொழிகளையும் பேசும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இந்தச் சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. இலங்கையில் தமிழ் பேசும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இந்தச் சலுகைகள் தரப்படுவதில்லை. சிங்கள இளைஞர்கள் அத்தனைப் பேருக்கும் சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. தமிழ் பேசும் அத்தனை இளைஞர்களும் ஒதுக்கித் தள்ளப்படுகின்றனர்.

ஈழத் தமிழர்கள் இலங்கை மக்கள் தொகையில் 25 விழுக்காடாக உள்ளனர் அதனால், காவல்துறை, படைத்துறை மற்றும் எல்லா வேலை வாய்ப்புகளிலும், மேற் படிப்பு இடங்களிலும், கால் பகுதி இடங்களை ஈழத்தமிழர்களுக்குக் கொடுத்துவிட்டு. முக்கால் பங்கு இடங்களைச் சிங்களவர்கள் வைத்துக் கொண்டால், அது திறமைக்கு மதிப்புக் கொடுக்கா விட்டாலும், சிங் நயமை உடையதாகவாவது இருக்கும். ஆனால், சிங்கள அரசு அந்த நயன்மையை வழங்க அணியமாக இல்லை. பெரும்பான்மையாக வாழும் சிங்கள இனம் எல்லாவற்றையும் எடுத்துக் கொள்கின்றது. சிறுபான்மையாக வாழும் ஈழத் தமிழ் இனம் எல்லாவற்றையும் இழந்து கொண்டு இருக்கின்றது:)

11) இந்தியாவில் சீக்கியத்தொழிலாளர்களுக்குக் கூலியும், அந்த வேலையைச் செய்யும் மற்றவர்களுக்கு அதிகக் கூலியும் கொடுக்கப்படவில்லை. சமவேலை செய்யும் எல்லோருக்கும், சமமான சம்பளம் கொடுக்கப்படுகின்றது.

இலங்கையிலே தேயிலைத்தோட்டங்களில் வேலை செய்யும் தமிழ்த் தொழிலாளர்களுக்குக் குறைந்த கூலியும், அதே வேலையைச் செய்யும் சிங்களவர்களுக்கு அதிகக் கூலியும் கொடுக்கப்படுகின்றன. இந்தப் பாகுபாடு ஏன் என்று கேட்கும் தமிழர்கள் கொடுமைப்படுத்தப்படுகின்றனர். அவர்களின் வீடுகளைத் தீ வைத்துக் கொளுத்துகின்றனர் சிங்களவர்கள்,

13) சீக்கியர்கள் வாழும் பஞ்சாப் மாநிலத்திற்குள்ளே, மற்றவர்களை அதிகமாக குடியேறச் செய்து, பஞ்சாப் மாநிலத்திலேயே சீக்கியர்களைச் சிறுபான்மையினராக ஆக்கி, அவர்களை அடிமைப்படுத்திட எந்த முயற்சியும் செய்யவில்லை, இந்திய அரசு. பஞ்சாப் மாநிலத்திற்குள், பஞ்சாப் மாநில அரசின் அனுமதியின்றி யாரையும் குடியேற்ற இந்திய அரசு முயற்சிசெய்வதில்லை.

இலங்கையில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் திரிகோணமலைப் பகுதிகளிலும், மற்றும் பல பகுதிகளிலும் சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் குடியேற்றிக்கொண்டிருக்கின்றது, சிங்கள அரசு. அதன் மூலம், தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்ப் பகுதிகளிலேயே, தமிழர்களைச் சிறுபான்மையினராக ஆக்கித், தமிழர்களை அடிமைகள் ஆக்கிவிடத் திட்டமிட்டுச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது இலங்கை அரசு. இந்த நாகரீகமற்ற, ஆட்சிமுறையற்ற செயல்களைக் கண்டிக்கும் தமிழர்களைக் கொடுமைப்படுத்திக் கொலை செய்து கொண்டிருக்கின்றது, செயவர்த்தனவின் ஆட்சி.

13) இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் சென்று தொழில் செய்து வாழ்வதற்குச் சீக்கியர்களுக்கு முழு உரிமையும், பாதுகாப்பும் கொடுக்கப்பட்டு இருக்கின்றன.

இலங்கையில் கொழும்பு நகரத்தில் தொழில் செய்து வாழ்ந்த ஓர் இலக்கம் தமிழர்களைக் கொன்று குவித்தும், ஏதிலிகள் ஆக்கியும், விரட்டியடித்தும் கொடுமை ஆட்சி புரிந்துள்ளது இலங்கை அரசு தமிழர்களின் சொத்துகளையெல்லாம் கொள்ளையடித்துள்ளார்கள் சிங்கள வெறியர்களும், அவர்களின் படைத்துறையும், அரசும்.

சிங்களவர்களின் இடையே வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்கள் அடிமைகள் போல் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். எந்த நேரத்திலும் தமிழர்களின் வீடுகளைத் தீ வைத்துக் கொளுத்துகின்றார்கள், சிங்களவர்கள். தமிழர்களைக் கொடுமைப்படுத்திப் படுகொலைகள் செய்கிறார்கள்.

14) இந்தியாவில் சீக்கியர்களைக் கொன்று அவர்களை உசாவலின்றியே தூக்கி எறிந்துவிட்டுச் சென்றுவிடலாம் என்ற சட்டம் இல்லை.

இலங்கையிலே சிங்களப் படைத்துறையினர், ஈழத்தமிழர்களைக் கொன்று குவித்து உசாவலின்றியே நாய்களைக் கொன்று தூக்கி எறிந்துவிட்டுச் சென்று விடுவது போன்று, தூக்கி எறிந்து விட்டுச் சென்று விடச் சட்டம் இயற்றியுள்ளது, இலங்கை அரசு. அதனால், இலங்கைப் படையினர் தங்கள் விருப்பம்போல ஒன்றுமறியா ஈழத்தமிழ் மக்களைக் கொன்று வீதியிலே எறிந்துவிட்டுச் சென்று கொண்டிருக்கின்றனர்.

(தொடர்ச்சி 5-ஆம் பக்கம்)

உ. த. மு. க. உறவு மடல் :

வன்முறைத் தடுப்புச் சட்டம்!

"நம் நாட்டில் உரிமை பற்றிப் பேச, எழுத, இயக்கம் நடத்த முடிகிறது. எனவே, இது மக்களாட்சி நாடு" என்று பேசுவதும், எழுதுவதும் உண்டு. 'தடுப்புச் சட்டம்' வரும்போது தாவிக் குதித்து அடங்கி விடுவதையும் பார்க்கிறோம்! இவர்களின் 'ஆதரவும்-எதிர்ப்பும்' ஆட்சி அதிகாரத்தைப் பெறுவதற்கான போட்டியில் ஏற்படுவனவே! ஆட்சி அதிகார முறையை மாற்றிடவும், அனைத்து அதிகாரங்களும் மக்களுக்கே என்ற முழக்கத்திற்கான உண்மைப் பொருளை வழங்கிடவும் முயல்பவர் மிக மிகக் குறைவானவரே!

'வன்முறை நடவடிக்கைகளைத் தடுத்திடச் சட்டம் வேண்டும்' என்பதில் எவர்க்கும் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், 'வன்முறை' எதனால், எப்படி நடவடிக்கையாக மாற்றம் பெறுகிறது? இதற்குக்காரணமானவர் எவரென்பவற்றில்தாம் நாம் கருத்து மாற்றம் கொண்டிருக்கிறோம்! மக்களாட்சி என்பது சட்டத்தின், காவல் துறையின், படையதிகாரத்தின் ஆட்சியாக வளர்த்தெடுக்கப்படுவதை நாம். கண்டிக்கவும்-எதிர்க்கவும்-தவிர்க்கவும்-தகர்க்கவும் வேண்டியவர்களாக உள்ளோம்.

இறப்புத் தண்டனை, வாழ்நாள் சிறை என்று அதிகார வரம்பு விரிவாக்கப்படுவதன் பொருளினை நாம் உய்த்துணர்ந்தால் 'மக்களாட்சி' என்பது 'கைகளை' விட்டு 'வானிலே' பறக்கத்தொடங்கிவிட்டதைத் தெளியலாம்!

'வன்முறை' நடப்பதைப் பார்க்கின்றனர். அதற்கான 'அடிப்படை'யை மாற்றுவது பற்றிக் கருதுவதில்லை. 'குதிரை' தன் நிழலைக் கண்டு 'முரட்டு'த்தனம் செய்கிறது. அதனை 'திருப்பி நிறுத்தி' நிழலைக் காணவிடாமல் தடுத்துவிட்டால், குதிரை முரட்டுத்தனத்தை விட்டுவிடும் எனபதை, ஒரு குதிரை வளர்ப்பவனும் புரிந்துக் கொள்கிறான். அவன் 'குதிரையேற்றமும்' தொடர்கிறது!

ஆனால், நம் 'அதிகாரக் குதிரை ஏறிகளோ', குதிரையைச் சவுக்கு மாற்றிச் சவுக்கால் அடிப்பதிலும், விரட்டுவதிலும், ஒடுக்குவதிலும் 'இனிமை' காண்கிறார்கள்! இவர்கள் மக்களை மக்களாகக் கருதுவதுமில்லை. குதிரைகளாகக் கருதி அன்பு காட்டுவதுமில்லை. ஆனால், எச்சில் ஒழுக, உயிரன்பு (சீவகாருண்யம் பற்றிப் பேசுவார்கள்! கதைப்பார்கள்!

வேகமாய் வந்த சட்டம்; வேகமாய்த் திருத்தப்பட்டு, வேகமாகவே செயலுக்கு வருகிறது. 'ஆட்சி', 'அதிகார' நலனையன்றித் தேச நலனைக்கருதி, இந்த 'வேகம்' ஏற்பட்டுள்ளது. ஆனால், 'தேச நல'னில் உள்ள 'மக்கள் நலன்' திரையிடப்பட்டு விட்டது! இதனைப் புரிந்துகொள்ள மறுப்பவர்கள் 'முன்பு போல', 'வேகத்திற்கு'-நெருக்கடி நிலைக்கு வருந்தியது போல-வெட்கப்படவும்கூடும்!

ஆனால், தவறான 'இறப்புத் தண்டனை' மூலம் உயிரை மீட்டுக்கொடுக்க, எந்தச் சட்டத்திற்கும் 'வலிமை' இருப்பதாகத் தெரியவில்லை. இதன் மூலம் 'இறப்புத் தண்டனையை மக்கள்மேல்' செலுத்துவதை நாம 'எதிர்க்க'வேண்டும் என்பதையும், நன்கு உறுதியாக அறிந்துகொள்ளுதல் நன்று!

'எதிர்க் கட்சி'களை ஒடுக்குகிறது என்பதால், 'ஆளுங்கட்சி'க்காரர்கள் ஒதுங்கிக் கொள்ளும் நிலைமை உருவாக்கப்படுகிறது. எந்த அதிகாரமும், பிடிப்பும் இல்லாத 'மக்கள்', 'பூசாரியிடம் பலியாகிக் கொண்டிருக்கிற நம்பிக்கையுடன் உள்ளார்கள்! எனவேதான், ஆளும் கட்சியிலும், எதிர்க்கட்சியிலும் மக்கள் 'உழன்று' கொண்டிருக்கிறார்கள். உண்மையான உழைப்பியக்கம், மக்களியக்கம் கூட்டப்பெறுவதன் கட்டாயத்தைப் புரிந்து கொண்டவர்கள், மக்களை ஒடுக்கும் சட்டமாகக் காண்பார்கள். இதனை 'மாற்றுக் கட்சிகளை' ஒடுக்கும் சட்டமாக மட்டும் காணமாட்டார்கள்!!

கட்சிகளுக்குள்ளேயே மக்கள் விருப்பம், மக்களாட்சி முறை இருப்பதாக மயங்கும் நிலைமை !நம்மை விட்டு நீங்கவில்லை!

சட்டங்களை நடைமுறைப் படுத்தவும், உருவாக்கவும் 'இந்த அரசமைப்பிற்கு உரிமை' இருக்கிறது! அந்த 'உரிமை'யின் ஒப்பந்தக்காரர்களாக உள்ளவர்கள் இதில் கருத்துக் கூறிவிட்டார்கள்!

ஆனால், 'மக்கள் சார்பில்' கருத்துத் திரட்டவில்லை. அதற்கான காலம் கூடத் தரப்படவில்லை. இப்படிப்பட்ட நிலைமையில் 'வன்முறைத் தடுப்புச் சட்டம்' நீடிக்கவே செய்யும். இதற்கான - நடைமுறைக்கான - கால எல்லை இரண்டாண்டு என்பது நீடிக்கும் - நீடிக்கவேண்டும்-நீடிக்கக்கூடாது என்ற கருத்துகள் எல்லாம் 'அரசின் விருப்பங்களே!' மக்கள் இச் சட்டத்தை 'எதிர்க்கவே' செய்வார்கள். ஏனெனில் அவர்களின் அடிப்படை நலனை, உரிமையைப்பெற முடியாதபடி அழுத்தும் 'சட்டப் பொத்தகங்களின்' கனம் கூடிக்கொண்டே வருகிறது!

கருத்துரிமைக்குத் தடை விதிப்பதை எச். ஆர் கன்னா என்ற நடுவர் எதிர்த்துள்ளார். இந்த உரிமைப்போர் சீனாவிலும், சோவியத்திலும் தொடரக் கூடியதே. ஆம், எவ்வகை நாட்டிலும் கருத்துரிமை மறுக்கப்படுதல் கூடாது! மக்களின் விருப்பம் அதுவாகவே உள்ளது! இந்த உரிமை தான் 'மக்கள் வாழ்வியலை' முன்னேற்றும், வழிநடத்தும்!

—பறம்பை அறிவன்

மக்கள் உரிமைகளைப் பெறுவதற்கே மக்களரசு!

தொடர் - 13

ஐந்து நாடுகளில் முப்பது நாள்கள்!

என் முதல் ஐரோப்பிய சுற்றுச் செலவு

ஓவியர் தின் கவரெழுதும்
ஓவியத்தைக் கண்ணுறுவான்
தேவிமையாம் அழைத்திட ஆண்
சித்திரமேல் நான் பாரேன்;
பாவையர்தம் உருவமெனில் நீர்
மனக்குமனம் பொறேன் என்முன்;
காவிவிழி மங்கையிவள்
கற்புவெற்பின் வற்புளதால்!

இவ்வழகிய பாடல், பாவலர் வேதநாயகம் (பிள்ளை) அவர்கள் எழுதிய அண்மைக்கால இலக்கிய மாகும். இதன் விளக்கத்தைப் பாருங்கள்.

புதிதாகத் திருமணம் செய்துகொண்ட இணையர் மகிழ்ச்சியாக ஊரைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் கோயில் ஒன்றுக்குச் சென்று பார்த்துக் கொண்டிருக்கையில், அக் கோயி லின் மறுபுறம் உள்ள ஒரு சுவரில் ஓவியர்கள் சிலர் புதியனவாகச் சில ஓவியங்களை எழுதிக் கொண்டுள் ளார்கள் என்றும், அவற்றைப் பார்த்து மகிழலாம் என்றும், கணவன் தன் இளம் மனைவியை அழைக் கின்றான். அதற்கு அப் பெண், "அவ் வோவியங்கள் ஆண்களுடையனவாக இருப்பின், நான் அதைப் பார்க்க மாட்டேன். பெண்களுடையனவாக இருப் பின், நீங்கள் அவற்றைப் பார்ப்பதை நான் பொறுத் துக் கொள்ளமாட்டேன்.' என்று கூறி, அங்கு போக மறுத்து விடுகிறாள்.

இப் பாடலும் நல்ல இலக்கியச் சிறப்பு வாய்ந்த பாடலே. ஒரு பெண் தான் மணந்த, தன் கணவன் மேல் உண்மையான அன்பு வைத்திருப்பதையோ, அவனை மதிப்பதையோ தவறு அல்லது சரியில்லை என்று யாரும் சொல்லமுடியாது! ஆனால், அதற் காகப் பிற ஆண்கள் அனைவருமே பார்க்கத் தகாத வர்கள் என்று ஒதுக்குவதையும், அவ்வாறு ஒதுக்கு கின்ற மனப்பாங்கை இக் குமுகாயம் அவளுக்குக் கற்பிப்பதையும், அவ்வுணர்வுதான் கற்பு என்று இலக்கிய ஆசிரியர்கள் பாராட்டுவதும், மக்களின் மேம்பாட்டுக்கே தடையிடுவதும், உயிரியக்கக் கோட் பாட்டையே அவமதிப்பதும் ஆகும். ஆனால், இதை இலக்கிய ஆசிரியர், **'கற்பு வெற்பின் வற்பு'** என்று பாராட்டுகிறார். அஃதாவது, **'கற்பு என்னும் மலை யின் வலிமை'** என்கிறார். பெண்களை இறுகலான அடிமைத் தனத்திற்கு உள்ளாக்கி, மேலும் மேலும் அவர்கள் அதிலேயே கிடந்து மீளமுடியாதபடி அவர் களின் மனத்தைப் புதைத்து விடுவதாகும் இது. இதுதான் சிறந்த பண்பாடு என்றால், அஃது நல்ல கற்பனையாகுமே யன்றி, நடைமுறைக்கு ஒத்துவராத மனக் கோளாறாகும், இது.

இப்படிப்பட்ட அடிமைக் குமுகாயம் என்றைக்குமே அடிமைப் பட்டுத்தான் கிடக்கமுடியும். இங்கொன்றை இன்னும் அழுத்தமாகக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் தமிழினமும், இவ் வந்திய நாடும், பிற உலக நாடுகளுடன் வேறு வேறு நிலைகளில் முன்னேறாமல் கிடப்பதற்கு, இதுபோலும் பெண்ணடிமைத் தனமே மூல காரணமாகும் என்பதை, நாம் துணிவாகவும், வெளிப்படையாகவும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

கற்பு என்பது கற்பிக்கப்பட்ட மனவொழுக்கமே தவிர, பெண்ணுக்கு அடிமைத்தனத்தை உருவாக் கிக்கொடுக்கும் நடைமுறையாகப் பொருள் தந்து விடக்கூடாது. இத்தகைய மனக்கோளாறுகள், மிகு கற்பனைகள் மக்களினத்தை எங்கே கொண்டுபோகின் றனவென்று பார்ப்போமானால், நமக்கு நன்கு தெளி வாக விளங்கும். இன்றைய குமுகாயச் சூழலில் நடப்பது என்ன? கட்டு மீறிய ஒழுக்கக் கேடுகளே ஆகும். அவை ஏன் தோன்ற வேண்டும்? எப்படி அவை வந்தன? அடக்கி வைக்கப்பெறும் பாலியல் உணர்வுகளே, ஒழுக்கக் கேடுகளாக வடிவம் பெறு கின்றன என்பதை நாம் உணரவேண்டும்.

ஒழுக்கக் கேடுகளை எந்த நாட்டிலும் வரவேற்ப தில்லை. ஏனெனில், அவற்றால் தனி மாந்தச் சிறப் பியல்புகள் அழிந்து போவதுடன், குமுகாயமும் கட்டுக்குலைந்து போகிறது. பொதுவாக ஒவ்வொரு வரும் தன் வழியிலும் சிறப்புறுதல் வேண்டும். தான் சார்ந்த குமுகாயத்தையும் சிறப்புறுத்தல் வேண்டும். இனி, குமுகாயச் சிறப்புக்குத் தான் உதவாவிடினும், தன்னால் குமுகாயச் சீரழிவு நேராதவாறு, தன் நடை முறையை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். இதற் காகவே, மக்களிடம் தனி மாந்தக் கட்டுப்பாடுகளை யும் வரையறுத்துக் காலப்போக்கில் வகுத்துக் கொண்டது. இதில், இடத்துக்கு இடம், காலத்துக் குக் காலம், இனத்துக்கு இனம் வேறுபட்டிருக்க லாம்; மாறுபட்டிருக்கலாம். ஆனால், அந்த வேறு பாடும் மாறுபாடும், ஏதோ ஒரு நிலையில் அக் குமு காய முன்னேற்றத்திற்கு உதவுகின்ற வகையிலேயே அமைதல் வேண்டும். மாறாக, அக் கட்டுப்பாடுகளும் சரி, அவற்றின் காலப்போக்கில் ஏற்படும் மாறுபாடு களும்-வேறுபாடுகளும் சரி, அங்குள்ள மக்கள் முன் னேற்றத்திற்கு முட்டுக் கட்டைகளாக, தடைச் சுவர் களாக அமைந்துவிடக் கூடாது! அவ்வாறு அவை அமையுமானால், அவற்றைக் குமுகாய உந்து ஆற்றல் தகர்த்தெறிந்து விடும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு தகர்த் தெறியப்படுவதற்கு முன், அதன் உந்து வேகம் இங் கொன்றும், அங்கொன்றுமாகச் சில உட்சிதைவுகளை உண்டாக்கும். இவ்வுண்மை மக்களியல் வரலாற்று நிலைகளிலிருந்து உணரப் பெறுவதாகும்.

இனி, தனி மாந்த ஒழுக்கம் என்பது, ஏன் அமைய வேண்டும்? எப்படி அமையவேண்டும் என்பதுபற்றி நாம் சிறிது ஆர்வத்துடனும், அக்கறை யுடனும் ஆழ்ந்து பார்ப்போம். முதலில் தனி மாந்த ஒழுக்கம் என்பதற்கு முன் **'ஒழுக்கம்'** என்பதுபற்றிச் சிறிது விளக்கமாகத் தெரிந்துக் கொள்வோம்.

ஒழுக்கம் என்னும் சொல் ஒழுகுதல்-நடத்தல்-கடைப்பிடித்தல் என்னும் பொருளில் கூறப்பெறும் சொல். இந்தச் சொல், நீர் ஒழுக்கு என்னும் ஓர் இயற்கை நிகழ்விலிருந்து உருவாகி இருத்தல் வேண்டும். இஃதொரு நான்காம் படிநிலைச் சொல் ஆகும். அஃதாவது, பொதுவாக ஒரு மக்கள் கூட் டம்தான் உணர்வு நிலை, அறிவு நிலை வளர்ச்சி பெறு வதற்கிணையாகவே, தன்மொழி வளர்ச்சி நிலையையும் உருவாக்கிக் கொள்கிறது. மாந்த வளர்ச்சியில், அது தன உணர்வின் அடிப்படையில், முதன்முதலில், தன் தேவைக்கேற்ப சில வாழ்வியல் பொருட் கூறுகளுக் கான சில குறிப்பொலிகளை அடையாளம் வைத்துக் கொள்ள விரும்பியிருத்தல் வேண்டும். அக் குறிப் பொலிகளும் உணர்வின் அடிப்படையில் எழுச்சி பெற்று வெளிப்பட்டனவாக இருத்தல் வேண்டும். அவ் வுணர்வுக் குறிப்பொலிகளே மீண்டும் மீண்டும் ஒலிக்கப்பெற்று, அடையாளம் வைத்துக் கொள்ளப் பெற்று, நாளடைவில்சொற்களாக நிலைபெற்றிருத்தல் வேண்டும். இத்தகைய சொற்கள் முதன் முதல் **மாந்தனின் இன்பதுன்ப உணர்வுகளையும், ஆள் களைப் பிரித்துணரும் உறவு நிலைகளையும், வாழ்வியலுக்கு மிகவும் இன்றியமையாத உணவு, உறையுள் நிலைகளையும், உலகின் பெருஞ்செயல்க ளான இயற்கை நிகழ்வுகளையும் கொண்டனவாக இருத்தல் வேண்டும். இவ் வகைகளினின்று வெளிப் பட்ட ஒலி அடையாளச் சொற்களே முதற்படி நிலைச் சொற்களாகும். இவையே உணர்வொலிச் சொற்கள் எனப்பெறும்.**

இவற்றுக்கு அடுத்தபடி, மாந்தத் தேவைகளை நிறைவு செய்தற் பொருட்டான உழைப்பு, தொழில், துய்ப்பு, இயற்கைப் போராட்டங்கள், அவற்றால் மாந்தர் பெற்ற எதிர்வு நினைத்தேர்வு முயற்சிகள் முதலியவற்றை உள்ளடக்கிய நிலையில் வெளிப்பட்ட உணர்வும், சிறிது வளர்ச்சிபெற்ற அறிவும் கலந்த ஒலி அடையாளச் சொற்களே இரண்டாம் படி நிலைச் சொற்களாகும். இவையே உணர்வொலிச் சொற்களும், ஒப்பொலிச் சொற்களும் ஆகும்.

இனி, இவற்றுக்கு அடுத்தபடி, மாந்தரின் மன வுணர்வு ஓரளவு வளர்ச்சி பெற்ற அடிநிலையில், விருப்பு வெறுப்புகள், விழைவு வெகுளிகள், அன்பு பகைகள், அவ் வுணர்வுத் தொடர்புடைய புற நிகழ்ச்சிகள், சூழல்கள், தன்மைகள், ஆளுமை அழிப்புகள் முதலியன போலும், உணர்வும் அறிவும் மேலும் சிறிது வளர்ச்சி பெற்ற காலை, வெளிப்பட்ட ஒலி அடையாளச் சொற்களே மூன்றும் படி நிலைச் சொற்கள் ஆகும். இவையே அடிப்படை வாழ்வியல் சொற்கள் ஆவன.

அடுத்து, மாந்தரின் மனவுணர்வும், அறிவுணர் வும் ஓரளவு சிறப்புற்று வளர்ந்த நிலையில், முந்திய நிலை உணர்வு, அறிவு வாழ்க்கையில், அடிப்படையில் மனவுணர்வுத் திரிபுகள், நடைமுறைத் திரிபுகள், உண்மையினின்று வேறுபட்ட-மாறுபட்ட உணர்வு நிலைகள், இவற்றின் அடிப்படையில் புறநிலைச் செயற்பாடுகளில் கண்ட நேர்மை, நேர்மையல்லாத செயல்கள், ஏற்றுக் கொள்ளப்பெறும் அல்லது தவிர்க்கப்பெறும் செயல்கள், குழு வாழ்வியலுக்கு உடன்பாடான, அல்லது முரண்பாடான நடை முறைகள் ஆகிய இவற்றை அடிப்படையாகக் கொண்ட, உணர்வறிவு நிலை, அறவுணர்வு நிலைச் சொற்களே நான்காம் படிநிலைச் சொற்கள் ஆகும்.

இந் நான்காம் படிநிலைச் சொற்களில் ஒன்றே ஒழுக்கம் என்னும் இவ் விழுமிய அறவுணர்வுச் சொல்லாகும் இன்றைய நிலையில் இது மிக்க வளர்ந்தோங்கிய மனவுணர்வுச் சொல்லாகவும் அற வுணர்வுச் சொல்லாகவும் விளங்கி, மாந்தக் குமு காய வளர்ச்சியின் அளவுப் படிக்கல்லாக விளங்கு கின்றது. நீரின், முறையான அளவான நேரான ஒழுகுதல் செயலே, மாந்தனுக்கு அவ் வகையான அடிப்படை உணர்வுக்கு எடுத்துக்காட்டாக விளங்கி யிருத்தல் வேண்டும். எனவே, இதன் செயல்முறை யின் சீரிய இயற்கை நிகழ்வையே மாந்தரினத்தின் சீரிய செயல்முறைச் சொல்லாக எடுத்துக்கொண்ட தாகக் கருதமுடியும். தமிழ்மொழியின் மிகச்சிறந்த மனவளர்ச்சிச் சொற்களில் இதுவும் ஒன்று. வேறு மொழிகளிலும் இட்டத்தட்ட இதனடிப்படையி லான, ஆனால் வேறு வேறு எடுத்துக் காட்டுகளைக் கொண்ட சொற்களாக, இப்பொருளுடைய சொற் கள் அமைந்திருக்கலாம். அவைபற்றி ஆங்காங் குள்ள அறிஞர்கள் ஆராய்ந்து பார்த்தால் உண்மை புலனாகும்.

—(தொடரும்)

தமிழீழ விடுதலை ஆதரவு பொதுக்கூட்டம்!

தமிழீழ விடுதலை ஆதரவுப் பொதுக்கூட்டம் கோவை மாவட்டம், பல்லடம் வட்டத்தில் முப்புர மாகுமுமாக நடைபெற்று வருகிறது. பல்ல டம் வட்டம், பொங்கே கவுண்டன் புதூரில், அவ்வூர் இளந் தமிழர்களால் 'தமிழீழ விடுதலைத் தோழமைக் கழகம்' எனும் அமைப்பின் கீழ், தமிழீழ விடுதலை ஆதரவுப் பொதுக்கூட்டம் கடந்த 18-5-1985 காரி யன்று, இரவு 8 மணியளவில் தொடங்கியது. கூட் டத்திற்கு இந்திய விடுதலைப் போராட்ட ஈகி திரு. பி. ஏ. ஆர். சோமசுந்தரம் அவர்கள் தலைமையேற்க, திரு. இரா. பாலன் அவர்கள் முன்னிலையில் திரு. க. கவினரசு வந்திருந்த அனைவரையும் வரவேற்க, திரு. த. இரத்தினசாமி கூட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

அடுத்து, தமிழ் மறவர், தென்மொழி நா. முத் துக்குமரனார் அவர்கள், இலங்கைத் தொடர்பான அனைத்துச் செய்திகளையும், முன்னைய வரலாறுகளை யும் கூடியிருந்த மக்கள் விளங்கிக் கொள்ளுமாறு விளக்கிச் சிறப்புரை நிகழ்த்த, வந்திருந்த தோழர். சிவம் (மட்டக்களப்பு சிறையுடைப்பில் வெளிவந்த வர்) தோழர். காசிம், (இருவரும் த. ம. வி. க.) தோழர். செல்வா (தமிழீழ விடுதலைப்படை) ஆகி யோரை அறிமுகம் செய்து அமர்ந்தார்.

முதலில் தோழர். காசிம், தமது விடுதலைப் போரின் தொடக்க அறநிலையையும், தற்பொழுதைய திறமுடைக் கருவி நிலையையும், இயக்கங்கள் பிரிந்து வளர்ந்த நிலையையும் தெளிவுபட விளக்கி விலகினார். அவரை அடுத்து, தோழர் சிவம் மிக நீண்ட சொற் பொழிவில், கருவிப்போரின் கட்டாயம் குறித்தும், அங்கொன்றும்-இங்கொன்றுமாகத் தமிழ்ப் பகுதி களில் மற்ற விடுதலை இயக்கங்கள் நடத்தும் தாக்குத லாகவினையும் நிகழ்கள் குறித்தும், பரந்துபட்ட வெகு மக்கள் புரட்சியின் இன்றியமையாமை குறித் தும் விளக்கியதோடு, கல்வி, அரசப்பணி, பொரு ளியல் வகையாக சிறிலங்கா இனவெறிச் சிங்கள ஆட்சி, தமிழர்களைப் போராடத் தூண்டிய வகை யையும், அதன் வளர்ச்சி நிலைகளையும் கூறினார். மேலும், அவர் சிறையுடைத்து வெளியேறிய வீரச் செயலை விளக்கினார். அது புறம்பாடத் தகுதியுடைத் தன்றோ? அவர் சொற்பொழிவு ஒரு மணி நேரத்திற் கும் அதிகமாக இருந்தது.

தோழர். சிவத்தின் உரையில், உலக நாடுகள் தமிழீழத்தை ஏற்க (அங்கீகரிக்க), மண்டிலச் சார் பற்ற தலைமை நாடான இந்தியா, முதலில் தமி ழீழத்தை ஏற்று (அங்கீகரித்து) மற்ற நாடுகளுக்கு வழிகாட்டியாக, அமையச்செய்வதே தமிழக மக்கள் தமிழீழ மக்களுக்குச் செய்யும் தலையாய உதவியாகும் என வலியுறுத்தினர்.

அடுத்து, தோழர். செல்வா (த.வி. இராணுவம்) அவர்களும் பேசினர். அம் மேடையிலேயே 150-க் கும் மேல் உருபாக்கள் மக்களால் மனமுவந்து தரப் பெற்றது.

இம் மாதிரியான கூட்டங்கள், கடந்த 17-5-85 அன்று, அனுப்பப்பட்டி என்னும் சிற்றூரிலும், 19-5-85 அன்று, பனப்பாளையம் என்னும் சிற்றூரி லும் மற்றும் வதம்பச்சேரி, செஞ்சேரிமலை ஆகிய ஊர்களிலும் சிறப்புற நடந்தேறின. 14-6-85 அன்று மொரட்டுப்பாளையம் என்னும் ஊரிலும் நடைபெற்றது. —செய்தி: த. கவினரசு, பல்லடம்

அன்பர்கள் கவனிக்க ...

பொறுப்பாசிரியர் அவர்களை வந்தும்காணவும்; கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி ஞாயிறு ஆகிய நாள்களில் மாலையில் 5 மணிக்குமேல் முன் இசைவு பெற்று வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

—அமைச்சர்.

தமிழர்கள் இந்து சமயத்தவர் அல்லர்!

மலேசிய இந்தியர்களில் 85 விழுக்காட்டினர் தமிழர்களே!

அவர்களில் 82 விழுக்காடு ஏழைகளே!

மலேசிய நாட்டில் உள்ள இந்தியர்களில், 82 விழுக்காட்டினர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்குக் கல்விக் குறைவும், வருமானக் குறைவும் ஒரு தொடர் கதையாக இருக்கின்றது என்று மலாயா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த, பேராசிரியர் பண்டாரகர் டி, மாரிமுத்து கூறினார்.

மலேசியாவிலுள்ள தேவான் பகாசா மண்டபத்தில் நடைபெற்ற தமிழர் மறுமலர்ச்சிக் கருத்தரங்கு ஒன்றுக்கு அனுப்பிய கட்டுரையில், அவர் இந்த விளக்கங்களைக் கூறினார்.

நாட்டின் இந்திய மரபு வழியினரில் பெரும் பகுதியினர் வாழும் தோட்டப் புறங்களில், அவர்களின் திறந்தால் உருவாக்கங்கள் அதிகரித்திருந்த போதிலும், அவர்கள் அதன் மூலம் பெறும் ஊதியம் கடந்த 15 ஆண்டுகளில் பெருமளவில் குறைந்துள்ளதையும், அவர் சுட்டிக் காட்டினர். 1970 ஆம் ஆண்டு, தோட்டப் பாட்டாளி பெற்ற ஒரு நாள் சம்பளம் 3·40 மலேசிய டாலர் ஆகும். இப்பொழுது அவர்கள் இந்தச் சம்பளத்தைப் போல் இரு மடங்கு அல்லது மூன்று மடங்குக் கூடுதலாகப் பெற்றாலும், வெள்ளியின் மதிப்பு குறைந்துள்ளதாலும், விலை ஏற்றம் அதிகரித்திருப்பதாலும் 1983 ஆம் ஆண்டு புள்ளி விளக்கப்படி, அவர்கள் நாள் ஒன்றுக்கு பெற்ற சம்பளத்தின் பழைய மதிப்பு 3·14 டாலர் தான். முன்பு ஒரு தொழிலாளி, மாதம் ஒன்றுக்கு, 2000 அயிரம் கிலோ) தொய்வப் (ரப்பர்) பாலை எடுத்திருப்பார் என்றால், இப்போது இரண்டு மடங்கு அல்லது மும்மடங்காகி இருக்கிறது.

இதனை சைம் டார்பி, கத்ரி மற்றும் அரிசன் குராசு பீ:ல்டு போன்ற நிறுவனங்களின் ஆண்டு அறிக்கையில் காண முடிகிறது.

இன்றைய பொருளியல் மந்த நிலையிலும் இந்த நிறுவனங்களின் மூலமான வருமானம் பல கோடி வெள்ளியாகப் பெருகியுள்ளது. ஆனால், அதற்கேற்ற ஊதியம் தோட்டத் தொழிலாளர்களால் பெற முடியவில்லை.

ஊதிய ஈவைக் காணோமே!

மேலும் தோட்டப்புற மக்களின் பொருளியல் தரத்தைக் கொண்டு, கூட்டு முயற்சிகளில் பெரும் முதலீடாகப் பணம் திரட்டிய அமைப்புகள் மூலம், இந்தத் தொழிலாளர்களுக்கு உரிய ஊதியம் சேரவில்லை என்பதை இந்தக் காலக்கட்டத்தில் அறிய முடிகிறது. நம்மவர்களை நாம் ஏமாற்றும் முயற்சிகளாகச் சில அமைந்து விட்டிருக்கின்றன. இந்த அமைப்புகள் எதிர்காலத்தில் திட்டமிட்டுப் பொருளியலில் வளர்த்தாலன்றித் தொழிலாளர்கள் அடைய வேண்டிய ஊதிய ஈவை அடையமுடியாமல் போய் விடுவர் என்றும் அவர் சொன்னார்.

இப்பொழுது திட்டமிடப்படும் கூட்டு முயற்சிகள் முந்திய தோல்விகளை ஒரு பாடமாகக் கொள்ள வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

மலேசிய இந்தியர்கள்:

நாட்டில் மலேசிய இந்தியர்களின் நிலை என்ன என்பதையும், அவர்களின் கல்வி மற்றும் பொருளியல் தகுதிகள் குறித்தும், பர். மாரிமுத்து தம் கட்டுரையில் விரிவாக விளக்கினார்.

1980 ஆம் ஆண்டு, மக்கள் தொகை கணிப்புப் புத்தகம், இரண்டாம் பாகம், பக்கம் 227-இல் கண்டுள்ளபடி இவை வருமாறு:

தமிழர்கள் 9,25,448 (85 விழுக்காடு) மலையாளிகள், 34,864 (3·2 விழுக்காடு) சீக்கியர்கள் 32,684 (3·0 விழுக்காடு), தெலுங்கர்கள் 26,113 (2.4 விழுக்காடு), இந்து பஞ்சாபிகள் 5,148 (0·5 விழுக்காடு), பாகித்தானியர்கள் 9,898 (0;9 விழுக்காடு), வங்காள தேசத்தவர்கள் 787 (0·07 விழுக்காடு), பிற இந்தியர்கள் 32,118 2 9 விழுக்காடு), சிங்களவர்கள் 3 80 (0·3 விழுக்காடு), பௌத்தர்கள் 6,766 (0·6 விழுக்காடு), கன்பூசியசு 1451 (·01 விழுக்காடு), மற்றவர்கள் 27,317 (2·5 விழுக்காடு), சமயமற்றவர்கள் 708 (0 06 விழுக்காடு) ஆவர்.

[இவர்களிலும் யாழ்ப்பாணத் தமிழர்கள் 17,421 (1·6 விழுக்காடு). இன்னும் மொத்தக் கிறித்தவ மதத்தினர் 82,061 (7·5 விழிக்காட்டினரிலும், முசுலீம் மக்கள் 58,539 (5·3 விழுக்காடு) பேர்களிலும் பெரும் பகுதியினர் தமிழர்களே!]

பணக்காரர்கள் — ஏழைகள்:

ஆக இந்த இந்தியர்களில் அரசுப்பணி பார்ப்பவர்கள் 27,000, அதிகாரிகள் 3000, விற்பனைத் துறையினர்கள் 32,000; எழுத்தாளர்கள் 2100 பேர்கள் ஆகும். இந்த நான்கு தரப்பினரும் வருவாயுடைய, அஃதாவது வசய்ப்பு படைத்த இந்தியர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்கள் 18 விழுக்காட்டினராகும். நாட்டின் மூலப்பொருள் உருவாக்கத்தில் எஞ்சிய 82 விழுக்காட்டினர் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் உருவாக்கல்பிரிவில் 1,60,000 பேர், தொண்டூழியம் புரிபவர் 40,000, வேளாண்மையில் ஈடுபட்டிருப்பவர்கள் 1,7,5000 பேராகும். இந்த மூன்று தரப்பினரும் ஏழைகளாக அஃதாவது, வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களாகக் கருதப்படுகின்றனர். தோட்டப்புறங்களில் வாழும் இந்தியர்களின் 60 விழுக்காட்டினர் மிகக் குறைந்த வருவாய் உடையவர்களாக, மிகவும் ஏழைகளாகக் கருதப்படுகின்றனர்.

மலேசிய இந்தியர்களில் 1980 ஆம் ஆண்டு, 35 விழுக்காட்டினர் ஏழைகளாக இருந்தனர். 1983 ஆம் ஆண்டு, இந்தத்தொகை 55 விழுக்காடு. ஆக அதிகரித்துள்ளது. ஆக, 1980 ஆம் ஆண்டைவிட, 1983 ஆம் ஆம் ஆண்டு மலேசிய இந்தியர்களின் பொருளியல் நிலை மேலும் தாக்கப்பட்டுள்ளதை இப் புள்ளி விளத்தங்கள் மூலம் காணமுடியும்.

தோட்டப்புற மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமானால், அவர்கள் இப்பொழுது பெற்று வரும் சம்பளம் பன்மடங்கு உயர்த்தப்பட வேண்டும். அதனை அவர்கள் உருவாக்கம் செய்யும் மூலப்பொருள்களினால் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டே செய்ய முடியும். நாட்டில் வசதி படைத்தவர்களாக விளங்கும் 18 விழுக்காடு இந்தியர்களும் அரசுப்பணி அல்லது வாணிகம் போன்ற தொழில் துறைகளில் இருப்பவர்களாகும். இவர்கள் இந்த வசதிகளை மேம்படுத்திக் கொண்டிருப்பதற்கு உதவி இருப்பது கல்வியாகும்.

இந்தத் தொழிலாளர்கள், குழுவினர்களாக வாழ்ந்து பழக்கப்பட்டு விட்டவர்கள் என்பதால், இவர்களால் தனித்துத் துணிந்து வெளியேறி முன்னேற்றமான கருத்துகளை மேற்கொள்ள முடியவில்லை. மேலும், இவர்களுக்கு இதற்குப் போதுமான கல்வித் தகுதியும் கிடையாது.

இவர்கள் தொடர்ந்து பாட்டாளி வழியினரை உருவாக்கிக் கொள்வதற்கு இந்தப் பாட்டாளிகள் தங்கள் பிள்ளைகளைத் தோட்டப்புறப் பள்ளிகளுக்கு அனுப்புவதன் மூலம், முதலாளிகளுக்கு உதவி வருகின்றனர்.

தோட்டப்பாட்டாளிகளையே இந்நாட்டுத் தமிழ்ப் பள்ளிகள் உருவாக்குகின்றன என்று ஓர் ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளதை பர். மாரிமுத்து சுட்டிக் காட்டினார்.

இப் பாட்டாளிகள் தங்களது குழு மனப்பான்மையில் இருந்து விடுபட்டுத் தன் காலில் நிற்கும் வாய்ப்பு எப்படி ஏற்படும் என்பது பற்றியும் அவர் விளக்கினார்.

தொழில் கல்வியும், தற்சிந்தனையும்:

தோட்டப்புற இளம் வழியினர் மீண்டும் தங்கள் பெற்றோரைப் பின்பற்றாமல், அவர்களின் தகுதிக்கேற்ற தொழில் கல்விகளைக் கற்பித்தல் அவர்களுக்குத் தற்சிந்தனை ஏற்படும் வகையில், மாற்றுக்கருத்துகளை உணர்த்துதல், அவர்களது தொடக்கக் கல்வியை எலுப்படுத்துதல் பள்ளிக்கு முந்திய பாலர் படிப்பில் கவனம் செலுத்துதல போன்றவை அவர்களை அடுத்த தலைமுறையில் முன்னேற்றும் வழிகள் ஆகும்.

தமிழ்ப் பள்ளிகளில் கடந்த ஆண்டு நடந்த 5 ஆம் வகுப்புத் தேர்வு நன்றாக இருக்கிறது. இதற்குக் காரணியம், அவர்கள் பள்ளிக்கு முந்திய பாலர் படிப்பில் கவனம் செலுத்தியுள்ளதே ஆகும்.

மலாய் மொழியில் நமது மாணவர்களின் தேர்ச்சி 10 விழுக்காடாக இருக்கிறது. இதனை உயர்த்துவதற்கு, மேலும் தீவிர கவனம் செலுத்த பிள்ளைகளைத் தூண்டவேண்டும்.

முன்பு இருந்த நிலை கொஞ்சம் மாறி, இப்பொழுது எசு. ஆர். பி. தேர்வு எழுதுவதற்கு 85 விழுக்காடு மாணவர்கள் அணியமாகி இருக்கின்றனர். படிப்பில் பாதியை முடிப்பவர்கள் 15 விழுக்காடாகக் குறைந்துள்ளனர்.

மலேசிய இந்தியர் கல்வி நிலை;

உள் நாட்டுப் பல்கலைக் கழகங்களில், இந்திய மாணவர்கள் எண்ணிக்கையும் குறைந்து வருவதைக் காண முடிகிறது. உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடிக்கும் மாணவர்களின் திறன், தேர்ச்சிக்குறைவு தொடர்கிறது. இவர்களுக்கு இதில் முழுக் கவனம் செலுத்துவதற்குக் குமுக அமைப்புகள் வழங்கும் உதவிகள் மேலும் அதிகரிக்க வேண்டும்.

1970 ஆம் ஆண்டு மலாயா பல்கலைக் கழகத்தில் 559 இந்திய மாணவர்கள் பட்டப்படிப்பு படித்தனர். இது 7·3 விழுக்காடு ஆகும். 1983-ஆம் ஆண்டு 1967-பேர் பட்டப்படிப்பு படித்தனர். இது 6·7 விழுக்காடாகும், 1983 ஆம் ஆண்டில் 6903 பேர் பட்டப் படிப்பிற்கு வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் சேர்ந்துள்ளனர், ஆக, நம்மவர்கள் பல்கலைக் கழகப் படிப்புக்கு மாணவர்கள் அதிகரித்தும், இவர்கள் உள்நாட்டில் படிக்க வாய்ப்பு இல்லாதவர்களாக உள்ளனர். மலேசியாவின் கடந்த 5 ஆண்டுத் திட்டங்கள் பலவற்றில் தோட்டப்புற மக்கள் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளனர். இப்பொழுது இவர்களைப் பற்றிப் புதிய ஐந்தாண்டுத் திட்டத்தில் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

இந்நாட்டில் இந்தியர்களின் நிலை பொருளியலிலும், கல்வியிலும் பின்னடையாமல் இருக்கவேண்டும். 1990 ஆம் ஆண்டு உருவாகவிருக்கும் ஐந்தாண்டுத் திட்டத்தில் குறியாக இருந்து, நமது தேவைகளைத் தக்கபடி எடுத்துச் சொல்லிச் சேர்க்கவேண்டும். இதற்கான முயற்சிகளில், இப்பொழுதிலிருந்தே குமுகாயத் தலைவர்களும், அமைப்புகளும் விழிப்பூட்டிக் கொண்டிருக்க வேண்டும் என்று பர். மாரிமுத்து சொன்னார்.

குமுகாய மேம்பாட்டுக்காகப் படித்தவர்கள் அறிவாளிகள் என்று கருதப்படுபவர்கள், இம்மாதிரியான விளத்தங்களைப் பொதுமக்கள் முன்பு வைக்க தக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். நேரம்-காலம் பாராமல், இதுபோன்ற தகவல்களைத் திரட்டி வரும்போது, இதனை ஊக்கப்படுத்தி வரவேற்கக் குமுகாயம் அணியமாக இருக்கவேண்டும்.

தற் சிந்தனையின்றி எந்தச் செயலிலும் திறவீறு (சாதனை)கள் புரியமுடியாது என்பதை மலேசிய இந்தியர்கள் உணர்வார்களானால், அது கல்விமான்களின் கண்களைத்திறக்கவும்அவர்கள் மூலம் நன்மைபெறவும் வாய்ப்பளிக்கும் என்பதைத் திட்டவட்டமாகக் குறிப்பிட விரும்புகிறேன் என்று பர். மாரிமுத்து குறிப்பிட்டார்.

— நன்றி: 'தமிழ்நேசன்', (14-5-85)

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்:

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- ஊழல்களும பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் தலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். [இதழ் எண்:60] பதிவு, எண்: TN/MS (C)/657

அனுப்புதல்:
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி
சென்னை—5

பெறுநர்.
திரு/ திருவாட்டி

நூல்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 86-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

கழக அருளாளர்: தென்மொழி நா. இளமாறன்.
கழக அருட்கொடையாளர்கள்:
தென்மொழி ந.முத்துக்குமரன், பல்லடம்மா.ஆறுமுகம்.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5.அருணாசலத் தெரு, சென்னை-5